செ.வெ.எண்: 29 நாள்: 11.01.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 2604 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 10.01.2017 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு கூட்டுறவுத்துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழர் திருநாளான பொங்கல் திருநாளையொட்டி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பினை பொங்கலுக்கு முன்னரே நியாய விலைக்கடைகள் மூலம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள எம்.எம்.577, அன்னவாசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 711 குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலுப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 563 குடும்ப அட்டைதாரர்களுக்கும், எம்.எம்.572 மலைக்குடிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 621 குடும்ப அட்டைதாரர்களுக்கும், எண்.7 கீரனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 709 குடும்ப அட்டைதாரர்களுக்கும் என மொத்தம் 2604 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பொங்கல் பரிசுத்தொகுப்பில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 2 அடி நீள கரும்புத்துண்டு, 20 கிராம் முந்திரிபருப்பு, 20 கிராம் உலர் திராட்சை, 5 கிராம் ஏலக்காய் உள்ளிட்ட பொருட்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதன் மூலம் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ந.மிருணாளினி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.செல்லத்துரை, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.இராஜசேகரன், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் திரு.ராமசாமி, திரு.கார்த்திக்பிரபாகரன், ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**